ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

26.03.2026

1. கலிவாழ் மக்களின் துன்பம்
கருணை கொண்டு அகற்றவே
அழியாமை எனும் வழிகாட்டி
ஆறுமுகனார் அற்புதம் நிகழ்த்த

2. நிகழ்த்த பிரணவக் குடில் படைத்து
நிலவுலகில் அரங்கனென் அவதாரம்
சென்மத்தில் வேலவனார் உருவாக்கி
சரவண சோதியாய் வெளிப்பட

3. வெளிப்பட இன்று அருட்சுவடி வழி
வழிகாட்டி அருளாசி ஆகவே
தெளிவூட்ட அரங்கனும் அருளுகின்றேன்
திறம்பட விசுவாவசு சேல் திங்கள்

4. திங்களிலே ஈராம் குருவார அருளாசி
தொண்டர்கள் மகிழ்வுற உரைப்பேன்
ஓங்காரக்குடிலில் செய்யும் தொண்டு
ஓங்காரனுக்கே செய்யும் தொண்டாகும்

5. ஆகவே தொண்டர் பெருமக்கள்
அன்னதான சேவை வழியில்
மிகைபட சரணாகதி கொண்டு
முழுமைபட தொண்டு செய்து வர

6. வருகவே தேகமன பலமுடன்
வளமும் வருங்காலம் ஏற்றமும்
முருகப் பெருமானே அருளி வர
முன்வினை வென்று நற்பலன் கூட

7. கூடவே இனி பிறவா வண்ணம்
குருவாக வேலவன் வழிகாட்ட
ஈடேற்றம் இனிதே காண்பர்
எவர் சரணாகதி கொண்டாரோ

8. கொண்டவரோடு அவர் வழியில்
குடியவர் உறவுகளென யாவர்க்கும்
உண்டாகும் பாதுகாப்பு சிறப்பு
ஊழை வென்று கடைத்தேற

9. கடைத்தேற வாய்ப்பு கிட்டும்
கந்தனாக அரங்கன் யான் அருளும்
தடையிலா அன்னதான வழிகளை
தக்கபடி எல்லோரும் ஏற்று

10. ஏற்றுமே பொருளுதவி செய்து
இணைந்து தொண்டும் புரிய
மாற்றங்கள் தேட்டு தன வழியென
மண்ணுலகில் பலவகையும் கண்டு

11. கண்டுமே அரங்கன் என் வழி
கலியிடர்களை வென்றுமே
உண்டாகுவர் ஞானியர்களாகவே
உரைத்திட்ட அரங்கனென் குருவார
அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி